# 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

# உள்ளடக்கம்


அத்தியாயம் 01- நிறுவனக் கட்டமைப்பு / செயற்பாட்டு சாராம்சம்

அத்தியாயம் 02- முன்னேற்றம் மற்றும் நோக்குகை

அத்தியாயம் 03- ஆண்டின் மொத்த நிதி செயலாற்றுகை

அத்தியாயம் 04- செயலாற்றுகை குறிகாட்டிகள்

அத்தியாயம் 05- நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

அத்தியாயம் 06- மனிதவள திரட்டு

அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை

# அத்தியாயம் - 01

## 1. நிறுவனக் கட்டமைப்பு / செயற்பாட்டு சாராம்சம்

# கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

## அறிமுகம்

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் கிறிஸ்தவ மறையினதும் கலாச்சாரத்தினதும் இருப்பு மற்றும் அபிவிருத்திக்காக அரசின் கொள்கைகளுக்கமைய நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன

## நோக்கு

கிறிஸ்தவ மக்களது நலன்களின் பொருட்டு செயற்படுதல்

## பணிநோக்கு

கிறிஸ்தவ சமய, காலாச்சாரங்களால் வளம்பெற்ற விசுவாச, ஒழுக்க, விழுமியங்களை சமூக அங்கீகாரங்களுக்கமைவாக மேம்படுத்துதல்.

## நோக்கங்கள்

ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடனான கொள்கைகளை மக்களிடையே கட்டியெழுப்பும் நோக்குடன் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

<u>செயற்பாடுகள்</u>

1. கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் யாத்திரிகைகள் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய திருத்தலங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
2. தேசிய திருத்தலங்களது வருடாந்தத் திருவிழாக்களுக்கான நிதியை வழங்குதல்.
3. அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான உதவிகளை வழங்குதல்.
4. பொருளாதார உதவிகள் தேவைப்படுகின்ற கிறஸ்தவ தேவாலயங்களது புனரமைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான பொருளாதார உதவிகளை வழங்குதல்.
5. கிறிஸ்தவ மறைக்கல்விச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மறையாசிரியர்களது சேவைகளை மதிப்பீடு செய்தல்.
6. கிறிஸ்தவ சமய, கலை, இலக்கிய, கலாச்சார பாரம்பரியங்களை மேம்படுத்தும் பொருட்டு, தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழாக்களை நடாத்துதல்.
7. விவிலிய அறிவை மேம்படுத்தும் பொருட்டு விவிலிய வினாவிடைப் போட்டிகளை நடாத்துதல்.
8. கிறிஸ்தவ மக்களது முக்கிய விழாவான பாஸ்கா விழாவிற்கு பங்களிப்புச் செய்தல்.
9. கிறிஸ்தவ மக்களது கௌரவத்திற்குப் பாத்திரமான நத்தார் பண்டிகைக்கு பங்களிப்பு வழங்குதல் மற்றும் தேசிய நத்தார் விழாவைக் கொண்டாடுதல்.
10. தேசிய மற்றும் சமயஞ்சார் விசேட விழாக்களை நடாத்துதல்.
11. கிறிஸ்தவ மக்களது ஆன்மீக விருத்தி, ஆளுமை விருத்திக்கான நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
12. தேவாலயங்களை புணரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
13. சமய அலுவல்களுக்காக வருகின்ற வெளிநாட்டு துறவற மற்றும் பொதுநிலையினருக்கான, வீசாக்களுக்கான சிபாரிசுகளை வழங்குதல் மற்றும் யாத்திரிகர்களுக்கான அனுசரணை வீசாக்களுக்கான சிபாரிசுகளை வழங்குதல்.
14. சமய நிறுவனங்களுக்கு நீர், மின்சாரம், தீர்வை வரிச் சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
15. உள்நாட்டு கிறிஸ்தவ துறவிகளுக்கு கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
16. கிறிஸ்தவ மதத் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள்.
17. கத்தோலிக்க தேவாலயங்கள், மறைக்கல்விப் பாடசாலைகள் மற்றும் சமய நிறுவனங்கள் தொடர்பில் பதிவுச் சான்றிதழை வழங்குதல் மற்றும் தரவுத் தளமொன்றைப் பேணிச் செல்லுதல்.

# கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

இலங்கையில் வாழ்கின்ற கிறஸ்தவ மக்கள் பல நூற்றாண்டுகளாக தமது சமயத் தலங்களுடன் இணைந்து தமது சமய வழிபாடுகளை நடாத்திச் சென்ற போதிலும், இத்தகைய மதத்தலங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நேரடி தொடர்பு கட்டியெழுப்பப்படவில்லை. எனினும் எக்காலகட்டத்திலும் அனைத்து அரசாங்கங்களின் கீழும் தமது சமயத்தை வழிபடுவதற்கான சுதந்திரம் அனைவருக்கும் உரிமையாகக் காணப்படுகின்றன.

கடந்த தசாப்த காலத்தில் "அனைத்து சமயங்களும் சமமாகக் கருதப்படுதல் வேண்டும்" என்ற எண்ணக்கருவின் கீழ், கிறிஸ்தவ மக்களின் மீதும், அவர்கள் யாத்திரை மேற்கொள்கின்ற திருத்தலங்களின் மீதும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் விரிவாக வளர்ச்சி கண்டுள்ளதுடன், கிறிஸ்தவ பக்தர்கள் மற்றும் கிறிஸ்தவ வணக்கத் தலங்கள் மீதும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. அதன் பலனாக கிறிஸ்தவ சமூகத்தினர், சமயத்தலங்கள் மற்றும் அரசாங்கத்திற்கிடையே பரஸ்பர நம்பிக்கையும் தொடர்பும் மென்மேலும் விருத்தியடைந்தன.

கிறிஸ்தவ சமய கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு வழிபாடுகளை நடாத்தி, சமய விழுமியங்களை விருத்தி செய்வதற்கான அத்திவாரம், கிராமங்களிலும் நகரங்களிலும் அமைந்துள்ள சமயத் தலங்கள் ஊடாக இடப்படுகின்றன. உரோமை கத்தோலிக்க திருச்சபை மற்றும் தேசிய கிறிஸ்தவ சபை என்பன இணைந்து கிறிஸ்தவ திருச்சபைகளின் கூட்டாக குறித்த திருத்தலங்களை அடிப்படையாகக்கொண்டு, ஆன்மீக மற்றும் உளப்பாங்கு ரீதியாக கிறிஸ்தவ மக்களை அபிவிருத்தி செய்தலும், நல்லொழுக்கமுடைய எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பினை அரசாங்கம், ஏனைய நிறுவனங்கள் ஊடாக வழங்குவதே எமது சேவையாகும்.

1999 ஆம் ஆண்டு மே மாதம் அமைச்சரவைப் பத்திரம் மூலம் கலாச்சார, மத அலுவல்கள் அமைச்சின் கீழ் கிறிஸ்தவ மத, கலாச்சார அலுவல்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இத்திணைக்களம் பல்வேறு மாற்றங்களுக்குள்ளாகி பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் அமைச்சர்களின் கீழ் செயற்பட்டடது. 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் மிக முனைப்பான திணைக்களமாக கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் ஒழுங்கமைவுடனும் முறையாகவும் வளர்ச்சி கண்டுள்ளதுடன் தனது குறித்த கடமைப் பொறுப்புகளை திணைக்களத்தின் நான்கு பிரிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்துகின்றது. அவையாவன:

நிர்வாகப்பிரிவு

அபிவிருத்திப் பிரிவு

கணக்குப் பிரிவு

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## நிர்வாகப் பிரி

வுதிணைக்களத்தின் நிறுவன, நிர்வாக மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை வழிநடாத்தி, திணைக்கள நோக்கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் இப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

01. பணியாற்றொகுதியினரின் தனிப்பட்ட கோவைகளுக்கு ஏற்புடையதான அனைத்து தாபன நடவடிக்கைளையும் பேணிச்செல்லுதல்.

02. வெற்றிடங்களுக்கு புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்புடையதான நடவடிக்கைகளையும் ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் முறையாக பேணிச்செல்லுதல்.

03. அவ்வப்போது கேட்கப்படுகின்ற நிறுவனத் தகவல்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை வழங்குதல்.

04. அலுவலர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்றுவிப்புகளுக்கு ஏற்புடையதான கடமைப்பொறுப்புகளை மேற்கொள்ளுதல்.

05. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், திணைக்களத்து சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அனைத்து சுற்றறிக்கைகளையும் இற்றைவரைப்படுத்தல்.

06. நிறுவனத்தின் தொலைபேசி, மின்சாரம், நீர், கட்டிடங்கள் மற்றும் ஏனைய பல்வேறு செலவுகள் தொடர்பில் கட்டணங்களை சீராக்குவதற்கு சமர்ப்பித்தல் மற்றும் பேணுதல் நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ளுதல்.

07. பாதுகாப்பு சேவைகளை வழங்குதல், சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல், கணினி இயந்திரங்களின் பேணல் நடவடிக்கைகள், நிழற்படமெடுக்கும் இயந்திரங்களை பேணல், பெக்ஸ் இயந்திரங்கள் மற்றும் ஏனைய உடன்படிக்கை சேவைகளுக்கு ஏற்புடையதான அனைத்து கடமைகளையும் மேற்கொள்ளுதல்.

08. நாளாந்த வரவு விபரங்களை இற்றைப்படுத்தல், கடமை லீவுகள், புகையிரத அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், சீராக்குதல் மற்றும் புகையிரத ஆணைச்சீட்டுகளின் கோவைகளை பேணுதல்.

'09. அக்ரஹார்' காப்புறுதி விடயத்துடன் தொடர்புடைய அனைத்து அலுவல்களையும் மேற்கொள்ளுதல்.

10. கடன் தொடர்பான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவற்றை பூர்த்தி செய்து கணக்கு கிளையிடம் சமர்ப்பித்தல்.

11. வாகனங்களின் பராமரிப்பு தொடர்பான நடவடிக்கை மற்றும் போக்குவரத்து தொடர்பான அனைத்து நடவடிக்கைகள்

12. சமய நடவடிக்கைகளின் பொருட்டு வருகை தருகின்ற வெளிநாட்டு, மதகுருமார்கள் மற்றும் பொது நிலையினர் ஆகியோருக்கு வீசா பரிந்துரை செய்தல் மற்றும் யாத்திரிகளின் பொருட்டு அனுசரணை வீசா பரிந்துரை செய்தல்

13. சமய அமைப்புகளின் பொருட்டு மின்சாரம், நீர் மற்றும் தீர்வை வரி சலுகை வழங்குதல்

14. கிறிஸ்தவ உள்நாட்டு மதகுருமார்களுக்கு வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்குதல் தொடர்பான சிபாரிசுகளை வழங்குதல்

15. கத்தோலிக்க தேவாலயங்கள், மறைக்கல்வி பாடசாலைகள் மற்றும் சமய நிறுவனங்கள் என்பன தொடர்பாக பதிவுச் சான்றிதழ்கள் வழங்குதல், தரவு முறைமையினை பேணிச் செல்லுதல்.

16. தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியக தரப்புகளிடத்தில் தகவல்களை வழங்குதல்.

# அபிவிருத்திப் பிரி

வுதிணைக்களத்தின் பொருட்டு பொது திறைசேரியின் ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய வளமூலங்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற நிதியை பயன்படுத்தி திணைக்களத்தின் நோக்கங்கள் எய்து கொள்ளப்படுகின்றன. இதற்காக கருத்திட்டங்களை திட்டமிடுதல், முன்னேற்றத்தை அறிக்கையிடல், கிடைக்கப் பெறுகின்ற நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்கின்ற கருத்திட்டங்களை, சமய மற்றும் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தேவாலயங்களை மையமாகக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளை ஒழுங்கமைத்தலும் கூட்டிணைத்தலும், பிரதேச, மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களுக்குத் தேவையான நிதியை வழங்குதல் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுதல், அபிவிருத்திப் பிரிவின் பணிகளாகும்.

மேற்படி கடமைப் பொறுப்புகள் அபிவிருத்திப் பிரிவினூடாக பின்வரும் வகையில் நடைமுறைப்படுத்துகின்றன.

1. யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் கத்தோலிக்க திருச்சபையாலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தேசிய தேவாலயங்களின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுதல்.
2. வரலாற்றுச் சிறப்புமிக்க தேவாலயங்களில் நடாத்தப்படும் வருடாந்த திருவிழாக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
3. பொருளாதார ரீதியாக கடும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ள தேவாலயங்களின் புனரமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

01. பொருளாதார ரீதியாக கடும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ள தேவாலயங்களின் புனரமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

02. [illegible] கிறிஸ்தவ மத நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும்

03. கிறிஸ்தவ மறைக்கல்வி செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

04. மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு சீருடைகளை வழங்குதல்.

05. மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள்

06. கிறிஸ்தவ மத, கலை கலாச்சார, இலக்கிய செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

07. கிறிஸ்தவ கலைஞர்களை கௌரவித்து பாராட்டு விழா நடாத்துதல்.

08. [illegible] நூல்களை கொள்வனவு செய்தல் மற்றும் மறைக்கல்வி பாடசாலைகளுக்கு

09. கிறிஸ்தவ மக்களின் கௌரவத்திற்கு பாத்திரமான நத்தார் விழாவிற்கு பங்களிப்பு வழங்குதல்.

10. நத்தார் தபால் முத்திரைகளை வெளியிடுதல் மற்றும் அரச நத்தார் விழாக்களை ஒழுங்கு செய்தல்.

4. கிறிஸ்தவ மக்கள் யாத்திரை மேற்கொள்கின்ற பாஸ்கா நிகழச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பு நல்குதல்.தேசிய ரீதியிலும் சமய ரீதியிலும் முக்கியமான விழாக்களை ஒழுங்கு செய்தல்.

கிறிஸ்தவ மக்களின் ஆன்மீக மற்றும் ஆளுமை அபிவிருத்தி என்பவற்றை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

## கணக்குப்பிரிவு

இத் திணைக்களத்தின் பணிப்பாளரதும், கணக்காளரதும் கண்காணிப்பின் கீழ் தாபனப்பிரிவு, அபிவிருத்திப்பிரிவு என்பவற்றின் மூலம் நிறைவேற்றுகின்ற அனைத்து கடமைப்பொறுப்புகளின் இறுதி செயற்பாடான நிதிசார் பொறுப்புகளை உரியவாறு வழிநடாத்தலும் சரியாக நிறைவேற்றுதலும் இப்பிரிவின் கடமைப்பொறுப்புகளாகும்.

அப்பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

01. அனைத்து கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச்சீட்டுகளை (வவுச்சர்களை) பொறுப்பேற்று அவற்றின் கணித ரீதியான செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்தல், உறுதிச்சீட்டுக்களுக்கு (வவுச்சர்களுக்கு) ஏற்புடையதானதும் போதியளவில் தேவையான கடித ஆவணங்கள் உள்ளனவா என்பதும் தொடர்பாக பரிசீலனை செய்தல், நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய, பல்வேறு நிதி எல்லைகளுக்குள் செலுத்துவதற்கான அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தி செலவுகளை சான்றுப்படுத்துவதற்காக சமர்ப்பித்தல்.
02. சான்றுப்படுத்திய உறுதிச்சீட்டுகளை (வவுச்சர்களை) காசேட்டில் உள்ளடக்கி, செவ்வையாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளவதற்காக காசேட்டை பேணுதல் மற்றும் காசோலைகளை எழுதுதல்.
03. சம்பளம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சம்பள கழிப்பு பதிவேடுகளை பேணுதல்
04. வருடாந்த ஒதுக்கீட்டு கணக்குகளை அதற்கு ஏற்புடையதான சுற்றுநிருபத்தின் ஆலோசனைகளின்படி தயாரித்தல் மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களை அளித்தல்.
05. சில்லறை பண முற்பணங்களை பேணிச்செல்லுதல், சில்லறைக் காசேட்டை பேணிச்செல்லுதல், வங்கிக் கொடுக்கல் வாங்கலகள் உள்ளிட்ட பணப்பெட்டியின் நாளாந்த பண மீதியை உறுதிப்படுத்தும் வகையில் பேணிச்செல்லுதல்.
06. களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படுதல், களஞ்சியத்திற்கான பொருட்களை பெற்றுக்கொள்ளுதல், விநியோகித்தல், உரிய ஆவணங்களை பேணுதல்.
07. வருடாந்த மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் தொடர்புடைய தரப்புகளுடன் இணைந்து தரவுகளை திரட்டுதல்.
08. செலவு பேரேட்டை பேணிச்செல்லுதல், அவ்வப்போது வரவுசெலவு பதிவேட்டில் ஒதுக்கீடுகள் மற்றும் உண்மையான செலவுகள் என்பவற்றை ஒப்பிட்டுப் பார்த்து எதிர்வரும் காலத்திற்கு ஒதுக்கீடுகள் போதுமற்றதாக இருப்பின், ஏற்புடையவாறு நிதி ஒழுங்குவிதி 66 இன்படி வகைமாற்றங்களைச் செய்தல், குறைநிரப்பு ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
09. பொது வைப்புக் கணக்கை பேணிச் செல்லுதல் மற்றும் மாதாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்து உரிய திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
10. திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புகளை பரிசோதனை செய்தல், மாதாந்த கட்டுநிதி விண்ணப்பங்களைத் தயாரித்து உரிய திகதிக்கு முன்னர் திறைசேரியிக்கு அனுப்பி வைத்தல்.
11. அனைத்து கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் அதற்கு ஏற்புடையதான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். கொள்வனவு செய்யப்பட்ட பொருட் பதிவேட்டை விடயப் பொறுப்பு அலுவலரிடம் உரியவாறு கையளித்தல், அனைத்து கொள்வனவுகளுக்கும் உறுதிச்சீட்டுக்களைத் (வவுச்சர்கள்) தயாரித்தல் மற்றும் அவற்றை செலுத்துவதற்கு சமர்ப்பித்தல்.
12. கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற போது அறவிடப்பட்ட முத்திரை கட்டணங்கள் மற்றும் தடுத்து வைத்தல் வரி என்பவற்றை அறவிட்டு உரிய திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் அனுப்பி வைத்தல்.
13. மாதாந்தம் வங்கி கணக்கிணக்குக் கூற்றைத் தயாரித்தல்.
14. வெளியக அரச நிறுவனங்களிடத்தில் ஒதுக்கீடுகளை வகைமாற்றுதல் மற்றும் அதற்கு உரியதான அறிவிப்புக்களை கணக்கில் வைப்பதற்கான பணிகளை மேற்கொள்ளுதல்.

## ❖ உள்ளக கணக்காய்வு பிரிவு

திணைக்களத்தின் நிருவாகம், அபிவிருத்தி மற்றும் கணக்கு கிளைகளின் செயற்பாடுகள் உரிய சட்டதிட்டங்கள் விதிமுறைகளுக்கமைய இடம்பெறுகின்றதா என கணக்காய்வு செய்து பார்த்தல் இக்கிளையின் செயற்பாடாகும்.

இந்த செயற்பாடானது கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல் மற்றும் அனுமதித்துக் கொள்ளுதல்.
2. உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கமைய உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.
3. காலாண்டு அடிப்படையில் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை தயாரித்தல்.
4. கணக்காய்வு ஐயவினாக்களை வழங்குதல்.
5. முகாமைத்துவ கணக்காய்வு குழு கூட்டங்களை நடாத்துதல்.
6. கணக்காய்வு ஐயவினா மற்றும் பொதுக் கணக்குக் குழுவிற்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்களைத் தயாரித்தல்.


பணிப்பாளர்
உதவிப் பணிப்பாளர்
கிளை தலைவர் (தாபனம்)
அரச முகாமைத்துவ உதவியாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் 33
கருத்திட்ட உதவியாளர் 05
கணக்காளர்
அபிவிருத்தி கிளை
உள்ளக கணக்காய்வு பிரிவு
கிளை தலைவர் (கணக்கு)
நிருவாக உத்தியோகத்தர்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்
சாரதி
அலுவலகப் பணியாளர்
வீதி பொறுப்பாளர்
தொழிலாளர்

# அத்தியாயம் - 02

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் 2019

## முன்னேற்றம் மற்றும் நோக்குகை

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமானது இலங்கை முழுவதும் பரந்து வசிக்கின்ற இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட கிறிஸ்தவ மக்களது நலனோம்பல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் 45 ஆளினியினரைக் கொண்ட ஒரு திணைக்களமாகும்.

கிறிஸ்தவ தேசிய திருத்தலங்கள், தேவாலயங்கள், மற்றும் மத தலங்களை அபிவிருத்தி செய்தல், நத்தார், பாஸ்கா போன்ற மத மற்றும் தேசிய விழாக்களுக்கு பங்களிப்பைச் செய்தல், ஆன்மீக மற்றும் கிறிஸ்தவ மத நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல், கிறிஸ்தவ கலை கலாச்சாரங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன இத்திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திணைக்களமானது வருடாந்தம் உயர் செயற்றிறனை வெளிக்கொணர்வதுடன் 2019.04.21ஆம் திகதி பாஸ்கா ஞாயிறு தீவிரவாத தாக்குதலின் காரணமாக இத்திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டிருந்த பல நிகழ்ச்சித்திட்டங்களை இரத்துச் செய்ய வேண்டியும் பிற்போடவேண்டியும் வந்த போதும் கிறிஸ்தவ மக்கள் அதன் ஊடாக பாதிப்பிற்கு உள்ளாவதற்கு இடமளிக்காது பல்வேறு மாற்று முறைகளைப் பின்பற்றி திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்குகளை உயர்ந்த பட்சத்தில் பயன்படுத்துவதற்கு இத்திணைக்களமானது நடவடிக்கை எடுத்தது.

மத்தியில் நடாத்தப்படவிருந்த போட்டிகள் பன்முகப்படுத்தப்பட்டு மறைமாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டது. எமது உத்தியோகத்தர்களை பல்வேறு பிரதேசங்களுக்கு அனுப்பி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதன் ஊடாக அரச செலவுகளை குறைத்து எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்ள இத்திணைக்களத்தினால் முடிந்தது.

வருட இறுதியில் உரிய விதத்தில் திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்கப்பெறாமையானது பௌதீக ரீதியாக திணைக்களத்தினால் அடைந்து கொள்ளப்பட்ட செயற்றிறன் மட்டத்தை நிதிசார் ரீதியில் அடைந்து கொள்ள முடியாமற் போனமைக்கு காரணமாக அமைந்தது.

பதவிநிலை உத்தியோகத்தர் உட்பட திணைக்களத்திற்குள் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்வது ஒரு சவாலாகவே காணப்படுகின்றது. மேலும் திணைக்களம் தொடங்கப்பட்ட காலம் தொடக்கம் இற்றை வரை வாடகை கட்டிடங்களிலேயே இத்திணைக்களம் இயங்கி வந்ததுடன் நிரந்தரமாக ஒரு அரச கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அநேக முறைகள் விண்ணப்பித்தாலும் அது இற்றை வரை வெற்றியளிக்கவில்லை.

திணைக்களத்தினால் கோரப்படுகின்ற ஒதுக்குகளோடு ஒப்பிடுகையில் இத்திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற வருடாந்த ஒதுக்குகள் குறைவாகவே காணப்படுவதால், அவ்வொதுக்குகளை அதிகரித்தால் கிறிஸ்தவ மக்களுக்கு இத்திணைக்களத்தினால் மிகச்சிறந்த சேவையை ஆற்ற முடியும்.

எம்.சத்துரி பிந்து
பணிப்பாளர்
கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

# 02. 01 முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்குகை

## 2019 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள்

(செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது)

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2019 வரவுசெலவுத்திட்ட ஒதுக்கு (ரூ.மில்.) | முன்னேற்றம் | | விசேட விடயங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | பௌதீக முன்னேற்றம் மூ | நிதிசார் முன்னேற்றம் மூ | |
| 01 | ஆன்மீக ஆளுமை அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல். | 2 | 80% | 20% | கட்டுநிதி கிடைக்காததன் காரணமாகவும் 04/21 ஆந் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாகவும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்த முடியவில்லை. |
| 02 | ஏனைய தேசிய மற்றும் சமய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் | 1.53 | 100% | 100% | |
| 03 | பாஸ்கா சஞ்சிகை மற்றும் பாஸ்கா நிகழ்ச்சித்திட்டங்கள் | 2.3 | 100% | 100% | |
| | நத்தார் தபால் முத்திரை சித்திரப் போட்டிகள் | 7 | 100% | 100% | |
| 04 | நாடளாவிய ரீதியான கரோல் போட்டிகள் | | 80% | 80% | |
| | நத்தார் வாழ்த்து அட்டைகள் அச்சிடல் | | 100% | 80% | |
| | பல்வேறு நிறுவனங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதியுதவிகள் | | 80% | 40% | போதுமானளவு கட்டுநிதி கிடைக்காததன் காரணமாக அதிகளவான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க முடியவில்லை. |
| | அரச நத்தார் விழாவை ஒழுங்கு செய்தல். | | | | |
| | பொருளாதார ரீதியாக க‘டங்களை எதிர்நோக்குகின்ற ஆலயங்கள் / நிறுவனங்களது புனர்நிர்மாண செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் விசேட தேவாலயங்களது / நிறுவனங்களது திருவிழாக்களின்போது யாதிரிகர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல். | 7.3 | 100% | 100% | |
| 05 | தர்மபிரபா‘வர பாராட்டு விழா | 4 | 100% | 77% | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| 06 | நாடக செயலமர்வு மற்றும் போட்டிகளை நடாத்துதல் | | 100% | 77% | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| 07 | மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு சீருடைகளை வழங்குதல். | 26 | 20% | 65மூ | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| 08 | யாத்திரிகர் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட தேவாலயங்களது வருடாந்த திருவிழாக்களை நடாத்துதல் | 12 | 100% | 88% | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை காரணமாக 02 தேவாலயங்களுக்கு நிதி வழங்க முடியவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விவிலிய வினாவிடை போட்டி - 2019 | 6 | 100%<br>100% | 90% | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக கொழும்பு மறைமாவட்டம் பங்கேற்கவில்லை.<br>மறைமாவட்ட ரீதியிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக மாணவர்களது பங்களிப்பு குறைந்தமை |
| | மறைக்கல்வி - 2019 | | 100% | 90% | |
| | மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு நூலக கொடுப்பனவை வழங்குதல் | 75.5 | 100% | 99% | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| | மறைக்கல்வி பாடசாலைகளது அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களது அபிவிருத்திச் செயற்பாடுகளின் பொருட்டு பங்களிப்பை வழங்குதல். | 10.65 | 100% | 98.27% | மீதி ரூ.184,565.20<br>தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 5/2019 இன் அடிப்படையில் 10மூ ஒதுக்குகளை சேமிக்குமாறு நிதியமைச்சிடமிருந்து அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றமை. |
| | ஆலயங்களது நிருமாணம் மற்றும் புனரமைப்பு மற்றும் தேவாலயங்களது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல் | 23.5 | 100% | 96% | மீதி ரூ.246,155/41<br>தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 5/2019 இன் அடிப்படையில் 10மூ ஒதுக்குகளை சேமிக்குமாறு நிதியமைச்சிடமிருந்து அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றமை. |
| | யாத்திரிகர்கள் கட்டளைச் சட்டததின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட தேவாலயங்களது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். | 14.48 | 100% | 43% | 14.48 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்குகளிலிருந்து 2019/07/08 ஆந் திகதிய தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கமைய ரூ.7.7 மில்லியனை ஒதுக்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| | மடு தேவாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். | 199.5 | 100% | 37.9% | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |

# அத்தியாயம் - 03

# 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதி செயலாற்றுகை அறிக்கை

# 3. நிதி செயலாற்றுகை கூற்று

ஏசீஏ- எப்

## 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்றிறன் கூற்று

ரூ.

| வரவுசெலவுத்திட்டம் 2019 | | குறிப்பு | உண்மை நிலை 2019 | உண்மை நிலை 2018 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசிஏ-I |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசிஏ-I |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசிஏ-I |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமல்லா பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 185,212,435 | 198,609,930 | ஏசிஏ-3 |
| - | வைப்புகள் | | 1,444,482 | 263,222 | ஏசிஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 1,534,495 | 1,860,720 | ஏசிஏ-5 |
| - | ஏனைய பெறுகைகள் | | 1,755,739 | 1,216,055 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **189,947,151** | 201,949,927 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **189,947,151** | 201,949,927 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 23,000,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 22,710,067 | 20,373,622 | ஏசீஏ-2(ii) |
| 14,958,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 9,583,430 | 9,342,524 | ஏசீஏ-2(ii) |
| 146,002,000 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 125,138,029 | 137,383,436 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| 14,590 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 14,590 | - | |
| 183,974,590 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **157,446,116** | 167,099,582 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 800,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 277,191 | 103,773 | ஏசீஏ-2(ii) |
| 1,700,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 764,055 | 971,912 | ஏசீஏ-2(ii) |
| 10,650,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 10,464,585 | 6,999,260 | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 750,000 | மனித வள அபிவிருத்தி | 14 | 739,830 | 399,600 | ஏசீஏ-2(ii) |
| 37,985,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 66,752,233 | 40,461,601 | ஏசீஏ-2(ii) |
| 51,885,000 | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **78,997,894** | 48,936,146 | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **3,418,410** | 2,510,529 | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 968,441 | 262,872 | ஏசிஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 2,449,969 | 2,247,657 | ஏசிஏ-5 |
| | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | 239,862,420 | 218,546,257 | |
| - | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)** | | (49,915,269) | (16,596,330) | |

# 3.2.நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று
# 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

ஏசீஏ -பீ

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 26,890,353 | 26,259,763 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 6,208,076 | 5,292,602 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **33,098,429** | **31,552,365** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| தேறிய பெறுமதி | | 5,727,710 | 5,288,277 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 26,890,353 | 26,259,763 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 480,366 | 4,325 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **33,098,429** | **31,552,365** |

பக்க இலக்கம் 01 முதல் 48 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 49 முதல் 60 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

ஒப்பம்: பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: எம்.கே.பந்துல ஹரிச்சந்திர
பதவி : செயலாளர்
26.02.2020

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: எம் சத்துரி பிந்து
பதவி : பணிப்பாளர்
திகதி : 26.02.2020

கணக்காளர்
பெயர் : எஸ்.கே.குசலகுமாரன்
திகதி : 26.02.2020

S.K. Kusalakumaran
Accountant
Department of Christian Religious Affairs

## 3.3. நிதிப்பாய்ச்சல் தொடர்பான கூற்று

## 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப்பாய்ச்சல் தொடர்பான கூற்று

ஏசீஏ- சீ

**2019 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி பாய்ச்சல் கூற்று**

| | உண்மை 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 1,755,739 | |
| பிற திணைக்களங்கள் / அமைச்சுக்களின் ஊடாக சேகரிக்கப்படுகின்ற வருமானம். | - | - |
| கட்டுநிதி பெறுவனவுகள் | 185,212,435 | 199,825,985 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **186,968,174** | **199,825,985** |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 32,148,477 | 150,175,175 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 120,564,710 | - |
| பிற செலவுத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | 394,667 | - |
| திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 473 | 910 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **153,108,327** | **150,176,085** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **33,859,847** | 49,649,900 |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முற்பணங்களை அறவிடுதல் | 1,299,585 | 1,117,830 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **1,299,585** | **1,117,830** |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு;</u> | | |
| பௌதீக சொத்து நிருமாணம் அல்லது கொள்வனவு மற்றும் வேறு முதலீகளைக் கொள்வனவு செய்தல். | 33,373,641 | 50,768,080 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 2,261,832 | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **35,635,473** | **50,768,080** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **(34,335,888)** | (49,650,250) |
| **(எ)=( இ) + (ஊ)** | **(476,041)** | (350) |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| வைப்பு பெறுவனவுகள் | 1,444,482 | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **1,444,482** | - |
| உள்நாட்டுக் கடன்களை மீளச் செலுத்துதல் | - | - |
| வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்துதல் | - | - |
| வைப்புகளை கொடுப்பனவு செய்தல் | 968,441 | 350 |
| நிதி செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த நிதி ஓட்டம் (ஐ) | **968,441** | 350 |
| நிதிச் செயற்பாடுகளின் ஊடாக உருவாகிய நிதி ஓட்டம்(ஒ)=(ஏ)-(ஐ) | **476,041** | (350) |
| நிதிகளது தேறிய வேறுபாடுகள் (ஒ) = (எ) -(ஒ) | - | 350 |
| ஜனவரி 01 திகதியில் ஆரம்ப பண மீதி | - | - |
| டிசம்பர் 31ஆந் திகதியில் இறுதி பண மீதி | - | - |

3

# 3.4 நிதி கூற்று குறிப்பு

ஏசீஏ-3

2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பணி கட்டுநிதி கணக்கு

செலவின தலைப்பு
இல : 203

திணைக்களத்தின் பெயர்: கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

ரூபா

| முற்பணக் கணக்கு இலக்கம் | சனவரி 1 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி 1 | | | கிடைக்கப்பெற்ற பணிமற்பணம் 2 | | | தீர்க்கப்பட்ட பணிமற்பணம் 3 | | | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி 4 | | | திறைசேரிப் புத்தகங்களின் படி 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பணிமற்பண மீதி 5 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொடுத்துத் தீர்க்காத உப முற்பணம் 1(i) | தீர்க்கப்பட்டாத பணிமுற்பணங்கள் (தீர்க்கப்பட்டாத உப பணிமுற்பணங்கள் தவிர்ந்த) 1(ii) | மொத்தம் 1(iii) | திறைசேரி 2(i) | ஏனைய மூலங்கள் 2(ii) | மொத்தம் 2(iii) | செலவினம் 3(i) | காசு 3(ii) | மொத்தம் 3(iii) | தீர்க்கப்பட்டாத உப பணிமற்பண மீதி 4(i) | தீர்க்கப்பட்டாத பணிமுற்பணங்கள் 4(ii) | மொத்தம் 4(iii) | |
| 7002/0000/00/0404/0017/000 | - | - | - | 185,212,435 | 1,826,512 | 187,038,947 | 187,038,474 | 473 | 187,038,947 | - | - | - | 473 |

1. மேலே 4 மற்றும் 5 மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கான
   (1) பணம் அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்படாத 2018.12.31 திகதியன்று பண மீதி — ரூ. 473
   (2) ஏனைய காரணங்கள்- ............................................... ........................
   ரூ. 473

இந்த மீதிகள் அறிக்கையை முடிவுறுத்தும் போது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் அவ்வாறில்லையெனில் காரணங்களையும் குறிப்பிடுக.
மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை என சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்காளர்
பெயர் : எஸ்.கே.குசலகுமாரன்
திகதி : 26.02.2020

S.K. Kusalakumaran
Accountant
Department of Christian Religious Affairs

38

ஏசீஏ- 5

## 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்குகள்

செலவின தலைப்பு இல : 203

திணைக்களத்தின் பெயர்: கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

| முற்பண கணக்குகளின் பெயர் | முற்பண கணக்கு இலக்கம் | முற்பண கணக்குகளின் எண்ணிக்கை | 2019 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி (1) | செலவினத்தின் அதிகபட்ச எல்லைகள் ரூபா 3இ000இ000 வருடத்தினுள் பற்று வைத்தல் (2) காசாக | குறுக்குப் பதிவுகளினூடாக | பெறுகைகளின் அதிகபட்ச எல்லை ரூபா 800இ000 வருடத்தினுள் வரவு வைத்தல் (3) காசாக | குறுக்குப் பதிவுகளினூடாக | பொறுப்புக்களின் அதிகபட்ச எல்லை ரூபா 12இ000இ000 உள்ளவாறு மீதி 4ஸ்ரீ(1)(2)-(3) | பொறுப்புக்களின் அதிகபட்ச எல்லை ரூபா. (இல்லை) | திறைசேரிப் புத்தகங்களின்படி 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) அரசாங்க அலுவலர்களின் முற்பணம் | 8493/0/0/02/03/0011 | 1 | 5,292,602 | 2,261,832 | - | 1,299,585 | - | 6,254,849 | - | 6,254,849 |
| | 8493/0/0/02/03/0012 | | - | - | 188,137 | - | 234,910 | (46,773) | - | (46,773) |
| (2) ஏனைய முற்பணங்கள் | | | - | - | - | - | - | - | - | - |
| (3) நானாவித முற்பணங்கள் | | | - | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | | | **5,292,602** | **2,261,832** | **188,137** | **1,299,585** | **234,910** | **6,208,076** | **-** | **6,208,076** |

பிரதான கணக்காளர்
பெயர் : எஸ்.கே.குசலகுமாரன்
திகதி : 26.02.2020

S.K. Kusalakumaran
Accountant
Department of Christian Religious Affairs

## 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான செலவுக் கூற்று

செலவின தலைப்பு இல : **203**　　திணைக்களம்: கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்.

ரூ

| செலவினக் குறியீடு | நிதியிடல் (குறியீட்டு இல.) | ஏற்பாடுகள் | | | | செலவினம் | | | தேறிய விளைவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஏற்பாடு | காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் | நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்) | மொத்தச் செலவினம் | சேமிப்பு / மிகை | திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை | வேறுபாட்டுக்கான காரணம் |
| | | (1) | (2) | (3) (-)/+ | (4)=(1)+(2)+(3) | (5) | (6) | (7)= (5)+(6) | (8)=(4)-(7) | (9)=(8)/(4)*100 | |
| <u>மீண்டுவரும் செலவினம்</u><br><u>நிகழ்ச்சித் திட்டம் (1)</u><br><br>நிகழ்ச்சித் திட்டம்./கருத்திட்டம்/உப கருத்திட்டம்/ குறியீடு<br><br>குறிப்பு **- 5 -** கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீதியான வகுப்பீடு<br><u>ஆளுக்குரிய வேதனங்கள்</u> | | | | | | | | | | | |
| 1001சம்பளமும் கூலியும் | 11 | 16,800,000 | - | (600,000) | 16,200,000 | 16,186,748 | - | 16,186,748 | 13,252 | 0 | சாதாரண சேமிப்பு |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |
| 1002மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் | 11 | 1,200,000 | - | - | 1,200,000 | 1,008,416 | - | 1,008,416 | 191,584 | 16 | வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்க 05/2009இற்கமைய செலவு கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் காரணத்தினால் கடமைகள் இரத்துச் செய்யப்படுதல். |
| 1003ஏனைய கொடுப்பனவுகள் | 11 | 5,000,000 | - | 600,000 | 5,600,000 | 5,369,883 | 145,020 | 5,514,903 | 85,097 | 2 | சாதாரண சேமிப்பு |
| එකතුව | | 23,000,000 | - | - | 23,000,000 | 22,565,047 | 145,020 | 22,710,067 | 289,933 | | |
| குறிப்பு **- 6 -** செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்<br>பிரையாணச் செலவினம் | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1203உணவும் சீருடைகளும் | 11 | 12,000 | - | (8,000) | 4,000 | 4,000 | - | 4,000 | - | - | |
| 1205ஏனையவை | 11 | 500,000 | - | 90,000 | 590,000 | 548,023 | - | 548,023 | 41,977 | 7 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| மொத்தம் (ஆ) | | 2,412,000 | - | 432,000 | 2,844,000 | 1,908,749 | - | 1,908,749 | 935,251 | 33 | |
| பராமரிப்புச் செலவினங்கள் | | | | | | | | | | | |
| 1301வாகனங்கள் | 11 | 1,500,000 | - | - | 1,500,000 | 614,999 | - | 614,999 | 885,001 | 59 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை மற்றும் உரிய விதத்தில் திருத்தச் சேவைகளை மேற்கொண்டதால் பராமரிப்பு செலவுகள் குறைதல். |
| 1302பொறி, இயந்திரம், உபகரணம் | 11 | 350,000 | - | - | 350,000 | 324,596 | - | 324,596 | 25,404 | 7 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| 1303கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 11 | 60,000 | - | (32,000) | 28,000 | 3,040 | - | 3,040 | 24,960 | 89 | சிறு திருத்த வேலைகள் குறைவாகக் காணப்பட்டமை |
| மொத்தம் ( இ ) | | 1,910,000 | - | (32,000) | 1,878,000 | 942,635 | - | 942,635 | 935,365 | 50 | |
| சேவைகள் | | | | | | | | | | | |
| 1401போக்குவரத்து | 11 | 120,000 | - | - | 120,000 | 88,451 | - | 88,451 | 31,549 | 26 | பாதுகாப்பு காரணத்தினால் கடமைகள் இரத்துச் செய்யப்பட்ட |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1203உணவும் சீருடைகளும் | 11 | 12,000 | - | (8,000) | 4,000 | 4,000 | - | 4,000 | - | - | |
| 1205ஏனையவை | 11 | 500,000 | - | 90,000 | 590,000 | 548,023 | - | 548,023 | 41,977 | 7 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| மொத்தம் (ஆ) | | 2,412,000 | - | 432,000 | 2,844,000 | 1,908,749 | - | 1,908,749 | 935,251 | 33 | |
| பராமரிப்புச் செலவினங்கள் | | | | | | | | | | | |
| 1301வாகனங்கள் | 11 | 1,500,000 | - | - | 1,500,000 | 614,999 | - | 614,999 | 885,001 | 59 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை மற்றும் உரிய விதத்தில் திருத்தச் சேவைகளை மேற்கொண்டதால் பராமரிப்பு செலவுகள் குறைதல். |
| 1302பொறி, இயந்திரம், உபகரணம் | 11 | 350,000 | - | - | 350,000 | 324,596 | - | 324,596 | 25,404 | 7 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| 1303கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 11 | 60,000 | - | (32,000) | 28,000 | 3,040 | - | 3,040 | 24,960 | 89 | சிறு திருத்த வேலைகள் குறைவாகக் காணப்பட்டமை |
| மொத்தம் ( இ ) | | 1,910,000 | - | (32,000) | 1,878,000 | 942,635 | - | 942,635 | 935,365 | 50 | |
| சேவைகள் | | | | | | | | | | | |
| 1401போக்குவரத்து | 11 | 120,000 | - | - | 120,000 | 88,451 | - | 88,451 | 31,549 | 26 | பாதுகாப்பு காரணத்தினால் கடமைகள் இரத்துச் செய்யப்பட்ட |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | மை. |
| 1402 தபால், தொலைத்தொடர்பு | 11 | 600,000 | - | (50,000) | 550,000 | 366,180 | - | 366,180 | 183,820 | 33 | வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்க 05∴2009இற்கமைய செலவு கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் காரணத்தினால் கடமைகள் இரத்துச் செய்யப்படுதல் மற்றும் 2019ஆம் ஆண்டிற்கான தபால் செலவுகளுக்கான சிட்டைகள் கிடைக்கப்பெறாமை. |
| 1403மின்சாரமும் நீரும் | 11 | 400,000 | - | - | 400,000 | 292,157 | - | 292,157 | 107,843 | 27 | வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 05/2019இற்கமைய செலவு கட்டுப்பாட்டிற்காக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுதல். |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1404வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும் | 11 | 4,916,000 | - | (1,335,000) | 3,581,000 | 2,319,707 | - | 2,319,707 | 1,261,293 | 35 | வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 05.:.2019இற்கமைய மற்றும் 07/2019இற்கமைய திணைக்களமானது புதிய வாடகைக் கட்டிட முற்பணம் மற்றும் உரிய செலவுகள் உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாமல் போனமை. |
| 1409ஏனையவை | 11 | 3,400,000 | - | - | 3,400,000 | 2,623,928 | - | 2,623,928 | 776,072 | 23 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை |
| மொத்தம் ( ஈ ) | | 9,436,000 | - | (1,385,000) | 8,051,000 | 5,690,423 | - | 5,690,423 | 2,360,577 | | |
| ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் **(அ+ஆ+இ+ஈ)**<br><br>குறிப்பு **- 7 -** செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள் | | 14,958,000 | - | (985,000) | 13,973,000 | 9,583,430 | - | 9,583,430 | 4,389,570 | | |
| <u>மாற்றங்கள்</u> | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1501நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் | 11 | - | - | 970,410 | 970,410 | - | - | - | 970,410 | 100 | தகவல்களை வழங்கும் போது ஏற்பட்ட தொழிநுடப கோளாறுகள் காரணமாக ஆசிரியர்களது தகவல்கள் சீடி இறுவட்டுக்கு உள்ளடக்கப் படாததால் 13-1501 செலவு விடயத்திற்கு கோரப்பட்ட ஒதுக்குகள் ஒன்லைன் முறை ஊடாக நி.பி.66இன் கீழ் மாற்றும்போது ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறு காரணமாக ஏற்பட்ட செலவுத் தலைப்பாகும். |
| 1506அரசாங்க ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி | 11 | 450,000 | - | - | 450,000 | 315,976 | - | 315,976 | 134,024 | 30 | எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் சொத்துக் கடன்களைக் கோராமை |
| 1508ஏனையவை | 11 | 22,052,000 | - | - | 22,052,000 | 9,992,725 | 3,780,054 | 13,772,779 | 8,279,221 | 38 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை, பாதுகாப்பு |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | காரணங்களால் அரச விழாக்கள் இரத்துச் செய்யப்பட்டமை. |
| 2-1409 கிறிஸ்தவ சமய இலக்கிய மேம்படுத்தல் கருத்திட்டம். | 11 | 4,000,000 | - | - | 4,000,000 | 3,008,690 | - | 3,008,690 | 991,310 | 25 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை, |
| 3-1501மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான சீருடை வழங்குதல். | 11 | 26,000,000 | - | - | 26,000,000 | 17,004,671 | - | 17,004,671 | 8,995,329 | 35 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை மற்றும் ஒரு வழங்குனர் சீருடைகளை தாமதமா ஒப்படைத்தமை. |
| 4-1508 யாத்திரிகர்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஆலய திருவிழாக்கள். | 11 | 12,000,000 | - | - | 12,000,000 | 9,764,800 | 797,855 | 10,562,655 | 1,437,345 | 12 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை, |
| 5-1508 சமய கல்வி மற்றும் மறைக்கல்வி செயற்பாடுகள் | 11 | 6,000,000 | - | - | 6,000,000 | 5,388,258 | 10,000 | 5,398,258 | 601,742 | 10 | பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக மறைக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்துச் செய்யப்படுதல் மற்றும் கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |
| 13-1501 தஹம் திரிய மற்றும் மறைக்கல்வி பாடசாலைகளுக்கான நூலக புத்தகக் கொடுப்பனவு | 11 | 75,500,000 | - | - | 75,500,000 | 75,075,000 | - | 75,075,000 | 425,000 | 1 | கட்டுநிதி கிடைக்கப்பெறாமை, |
| **එකතුව** | | 146,002, | - | 970,410 | 146,972,410 | 120,550,120 | 4,587,909 | 125,138,0 | 21,834, | 15 | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 000 | | | | | | 29 | 381 | | |
| குறிப்பு **- 9 -** செலவு விடயரீதியான ஏனைய மீண்டுவரும் செலவினம் <br> 1701நட்டங்களும் பதிவழிப்பும் | 11 | - | - | 14,590 | 14,590 | 14,590 | - | 14,590 | - | - | சேமிப்பு இல்லை |
| மொத்தம் | | - | - | 14,590 | 14,590 | 14,590 | - | 14,590 | - | - | |
| <u>நிகழ்ச்சித் திட்டம் (1)</u> | | | | | | | | | | | |
| முழு மொத்தம் **(**குறிப்பு **5** முதல் **9** வரை**)** மொத்த மீண்டுவரும் செலவினம் | 11 | 183,960,000 | - | - | 183,960,000 | 152,713,187 | 4,732,929 | 157,446,116 | 26,513,884 | 14 | |
| <u>மூலதனம் செலவினம்</u> <br> <u>நிகழ்ச்சித் திட்டம் (1)</u> <br> பொது முதலீடுகளின் செலவு விடயரீதியான வகுப்பீடு | | | | | | | | | | | |
| குறிப்பு **- 10** முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | | | | | | | | | | | |
| 2001கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 11 | 200,000 | - | - | 200,000 | - | - | - | 200,000 | 100 | பாரிய திருத்த வேலைகள் இடம்பெறாமை |
| 2002பொறி, இயந்திரம், உபகரணம் | 11 | 100,000 | - | - | 100,000 | 73,691 | - | 73,691 | 26,309 | 26 | பாரிய திருத்த வேலைகள் இடம்பெறாமை |
| 2003வாகனங்கள் | 11 | 500,000 | - | - | 500,000 | 203,500 | - | 203,500 | 296,500 | 59 | பாரிய திருத்த வேலைகள் இடம்பெறாமை |
| <u>மொத்தம் (அ)</u> | | 800,000 | - | - | 800,000 | 277,191 | - | 277,191 | 522,809 | 65 | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறிப்பு - **11** மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | | | | | | | | | | | |
| 2102 தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் | 11 | 1,500,000 | - | - | 1,500,000 | 717,700 | - | 717,700 | 782,300 | 52 | வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 05/2019 மற்றும் 07/2019இற்க மைய செலவு கட்டுப்பாடு. |
| 2103 பொறி, இயந்திரம், உபகரணம் | 11 | 200,000 | - | - | 200,000 | 46,355 | - | 46,355 | 153,645 | 77 | வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 05/2019 மற்றும் 07/2019இற்க மைய செலவு கட்டுப்பாடு. |
| மொத்தம் **(ஆ)** | | 1,700,000 | - | - | 1,700,000 | 764,055 | - | 764,055 | 935,945 | 55 | |
| குறிப்பு **-12** மூலதன மாற்றங்கள் | | | | | | | | | | | |
| 2205 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மூலதன கொடைகள். | 11 | 10,650,000 | - | - | 10,650,000 | 10,464,585 | - | 10,464,585 | 185,415 | 2 | சாதாரண சேமிப்பு |
| மொத்தம் **(இ)** | | 10,650,000 | - | - | 10,650,000 | 10,464,585 | - | 10,464,585 | 185,415 | 2 | |
| குறிப்பு - **14** மனித வள அபிவிருத்தி | | | | | | | | | | | |
| 2401 ஆளணியினருக்கான பயிற்சி | 11 | 750,000 | - | - | 750,000 | 739,830 | - | 739,830 | 10,170 | 1 | சாதாரண சேமிப்பு |
| மொத்தம் **(உ)** | | 750,000 | - | - | 750,000 | 739,830 | - | 739,830 | 10,170 | 1 | |

ஏசீஎ-2(ii)

2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான செலவுக் கூற்று

செலவின தலைப்பு இல : 203

திணைக்களம்: கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்.

ரூ

| செலவினக் குறியீடு | நிதியிடல் (குறியீட்டு இல.) | ஏற்பாடுகள் வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஏற்பாடு | செலவினம் காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் | நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்) | மொத்தச் செலவினம் | தேறிய விளைவு சேமிப்பு / மிகை | திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை | வேறுபாட்டுக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) | (3) (-)/+ | (4)=(1)+(2)+(3) | (5) | (6) | (7)= (5)+(6) | (8)=(4)-(7) | (9)=(8)/(4)*100 | |
| 15-2205 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மூலதன கொடைகள். - மடு திருத்தலம் | 11 | - | 199,500,000 | - | 199,500,000 | - | 37,882,631 | 37,882,631 | 161,617,369 | 81 | மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு கருத்திட்டத்திற்காக போதுமான கட்டுநிதி கிடைக்கப்பெறாமை. |
| மொத்தம் (ஊ) | | 37,985,000 | 199,500,000 | - | 237,485,000 | 21,127,980 | 45,624,253 | 66,752,233 | 170,732,767 | | |
| நிகழ்ச்சித் திட்டம் (1) | | | | | | | | | | | |
| பொது முதலீட்டின் மீதான மொத்தச் செலவினங்கள் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | 51,885,000 | 199,500,000 | - | 251,385,000 | 33,373,641 | 45,624,253 | 78,997,894 | 172,387,106 | | |
| முழு மொத்தம் (குறிப்பு 5 - 15) | | 235,845,000 | 199,500,000 | - | 435,345,000 | 186,086,828 | 50,357,182 | 236,444,010 | 198,900,990 | | |

பிரதான கணக்காளர்
பெயர் : எஸ்.கே.குசலகுமாரன்
திகதி : 26.02.2020

S.K. Kusalakumaran
Accountant
Department of Christian Religious Affairs

## 3.5. ஒதுக்கப்பட்ட ஒதுக்குகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் | | உண்மை செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்குகள் முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்குகளது அளவின் %மாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்குகள் | இறுதி ஒதுக்குகள் | | |
| மீண்டெழும் | 183,960.000 | 183,960.000 | 157,446,116 | 85% |
| மூலதனம் | 51,885,000 | 251,385.000 | 78,997,894 | 31% |

## 3.6. நி.பி. 208இன் அடிப்படையில், பிற அமைச்சுக்கள் / திணைக்களங்களது பிரதிநிதிகளாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்குகள்

| தொடர் இலக்கம் | ஒதுக்குகள் பெறப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் | ஒதுக்குகளின் நோக்கம் | ஒதுக்குகள் | | உண்மை செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்குகள், வழங்கப்பட்ட இறுதி ஒதுக்குகளது %மாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்குகள் | இறுதி ஒதுக்குகள் | | |
| 1. | தேசிய கொள்கைகள் பொருளாதார நடவடிக்கைகள் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு | பட்டதாரி கொடுப்பனவுகளை வழங்குதல் | 460,000.00 | | 394,666.66 | 85.8% |

## 3.7. நிதியல்லா சொத்துக்களை அறிக்கையிடலின் செயலாற்றுகை

ரூ. .000

